அவர் எழுதுகின்றார்: மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு வேறு ஒரு வகை புதிய நோய் வரலாம் என்று கூறுகிறார்.

விஞ்ஞானிகள் கொரோனா வைரஸை கட்டுப்படதலாம். ஆனால் தொற்று நோய்களுக்கு எதிராக மனித இனத்தின் யுத்தம் முடிவடையாத யுத்தமாகும். எவ்வாறிருப்பினும் இது ஒரு நீண்ட விளக்கமாகும். எல்லாவற்றையும் கூற முடியாது. ஆனால் நான் ஏற்கனவே கூறியது போன்று நமது நல்ல முடிவுக்காக அல்லாஹ்விடம் முன்பை விட அதிகமாக தொடர்பை ஏற்படுத்திக் கொள்வது அவசியமாகும். அல்லாஹ் நமக்கு அதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: கொரோனா தொற்று நோய் பற்றி முதலிலும் நான் வழிகாட்டல் வழங்கியுள்ளேன். இப்போதும் நினைவுபடுத்துகிறேன். ஏனெனில் முழு உலகிலும் வேகமாக பரவி வருகிறது. இங்கும் இதன் தாக்கம் அதிகமாக உள்ளது. எனவே அரசும் கடும் எதிர்நடவடிக்கை எடுக்க வேண்டிய நிர்பந்தத்தில் உள்ளது. தொற்று நோய்கள் வரும்போது ஒவ்வொருவரையும் அது சூழ்ந்து கொள்ள முடியும். எனவே ஒவ்வொருவரும் மிகவும் எச்சரிக்கையாக இருப்பது அவசியமாகும். அரசின் கட்டளைகளின்படி செயல்படுங்கள். அதிக வயதானவர்கள், நோயாளிகள், நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ள நோயாளிகள் ஆகியோர் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அதிக வயதானவர்கள் வீட்டிலிருந்து குறைவாகவே வெளியில் வர வேண்டும். ஜுமுஆவிலும் கூட Gathering கூடாது என அரசாங்கம் சார்பாக கட்டுப்பாடு விதிக்காதவரை ஜுமுஆவை அந்தந்த பகுதிகளில் உள்ள பள்ளிவாசல்களிலேயே தொழுங்கள். பிள்ளைகளுடன் பள்ளிவாசலுக்கு வரக்கூடிய பெண்கள் வருவதிலிருந்து விலகி இருங்கள்.

உங்கள் உடலில் நோய் எதிர்ப்பு ஆற்றலை அதிகப்படுத்த ஓய்வு எடுப்பதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். குழந்தைகளிடமும் சீக்கிரம் தூங்குவதற்கும், 8,9 மணி நேரம் தூக்கத்தை முழுமை செய்து விரைவாக எழுவதற்கும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள். பிறகு கடை வீதிகளிலுள்ள உணவை உண்பதிலிருந்து விலகுங்கள். குறிப்பாக சிப்ஸ் போன்ற பாக்கெட்டுகள்.

யும் மக்கள் குழந்தைகளுக்கு மற்ற உணவுப் பண்டங்களையும் வாங்கிக் கொடுக்கின்றனர். சில உணவுகளை செய்து வைத்திருக்கின்றனர். அவை உடல்நலத்திற்கு கேடு விளைவிப்பவை. அவற்றிலிருந்தும் விலகி இருக்க வேண்டும். இதுவும் சிறிது சிறிதாக மனித உடலை பலவீனமாக்குகிறது.

டாக்டர்கள் இதையும் கூறுகின்றனர்: அதாவது அடிக்கடி தண்ணீர் குடிக்க வேண்டும். ஒரு மணி நேரம் அல்லது அரை மணி நேரம் அல்லது முக்கால் மணி நேரத்திற்கு ஒருமுறை தண்ணீர் சிறிது பருகுங்கள். நோய்களிலிருந்து தப்ப இதுவும் ஒரு வழியாகும். பிறகு கைகளை தூய்மையாக வைக்க வேண்டும்.

குறைந்தது ஐந்து முறை உளூ செய்பவருக்கு சுத்தமாக இருப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்து விடுகிறது. இதன் பக்கம் கவனம் செலுத்துங்கள்.

டாக்டர்கள் கூறுகின்றனர்: ஏதாவது ஒன்றை அருகில் வைத்துக் கொண்டு அதில் தும்ம வேண்டும்.

எவ்வாறிருப்பினும் தூய்மை அவசியமாகும். இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். ஆனால் இறுதி ஆயுதம் துஆ ஆகும். அல்லாஹ் நம் அனைவரையும் இந்த நோயின் தீங்கிலிருந்து பாதுகாப்பானாக. இந்த நோயினால் ஏதாவது காரணத்தால் பாதிக்கப்பட்ட அஹ்மதிகளுக்காகவும் குறிப்பாக துஆ செய்யுங்கள். அல்லது இவர்களில் சிலருக்கு வைரஸ் இருக்கிறது என்று மருத்துவர்களுக்கு சந்தேகம் இருக்கின்றது. அல்லது இவர்கள் வேறு ஏதாவது நோயினால் பாதிக்கப்பட்டிருந்தாலும் சரி துஆ செய்யுங்கள். பிறகு அதுபோன்று வேறு ஏதாவதொரு நோயின் காரணமாக பலவீனமாக இருந்தால் வைரஸ் தாக்குதல் தொடுக்கும். அவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களையும் பாதுகாப்பாக வைப்பானாக.

பொதுவாக ஒவ்வொருவருக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் இந்த உலகத்தை இந்த தொற்று நோயின் தாக்கத்திலிருந்து பாதுகாப்பாக வைப்பானாக. நோயாளிகளக்கு முழுமையான நிவாரணம் வழங்குவானாக. ஒவ்வோர் அஹ்மதிக்கும் பாதுகாப்பு வழங்குவதுடன் ஈமான் மற்றும் திட உறுதியில் உறுதிப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதற்கான நற்பாக்கியத்தையும் வழங்குவானாக.

**மொழியாக்கம்: முஅல்லிம் நிஸாமுத்தீன்**